செய்தி வெளியீடு எண். 215 நாள். 21.04.2017

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் இணைப்பு சக்கரம் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக மாற்றுத்திறனாளிகளுக்கு மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு.பா.பெஞ்சமின் அவர்கள் இணைப்பு சக்கரம் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை இன்று (21.04.2017) வழங்கினார்.

மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் இருகால்கள் பாதிக்கப்பட்டு கைகள் நல்ல நிலையில் உள்ள 38 மாற்றுத்திறனாளிகளுக்கு (38 X ரூ. 58,690) ரூ. 22,30,220 மதிப்பிலான பெட்ரோல் ஸ்கூட்டர்களை பொதுபிரிவின் கீழ் மற்றும் வருவாய்துறையின் சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மின்சாரம் தாக்கி (ரூ.3 இலட்சம்), பாம்பு கடித்து (ரூ.ஒரு இலட்சம்), கொசுமருந்து தெளிக்கும்போது மயக்கம் அடைந்து உயிரிழந்த (ரூ.ஒரு இலட்சம்), சாலை விபத்து (ரூ.ஒரு இலட்சம்) போன்ற நிகழ்வுகளில் உயிரிழந்த 4 நபர்களுக்கு ரூ.6 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் முதன்மை செயலாளர் பொதுப்பணித்துறை திரு.எஸ்.கே. பிரபாகர்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.கோ.அரி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.பி.பலராமன் (பொன்னேரி), திரு.வி.அலெக்சாண்டர் (அம்பத்தூர்), திரு.பி.எம்.நரசிம்மன் (திருத்தணி), திரு.டி.ஏ.ஏழுமலை(பூவிருந்தவல்லி), திரு.கே.எஸ்.விஜயகுமார் (கும்மிடிப்பூண்டி), மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திரு.ச.சா.குமார், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.எஸ்.ஜெயச்சந்திரன், தனிதுணை ஆட்சியர் (சமூகபாதுகாப்பு திட்டம்)(பொ) திரு.முத்துசாமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~